# அடையநினைத்த




அடையநினைத்த உன்னை நானும் ,

அடையமுடியாது ஓடிமறைவதேன் கண்ணா !,

அடையநினைத்த.....

மடையென கண்ணில் நீர்வழிந்திட,

இடையினில் சேலையும் நழுவிட;

நடைதளர்ந்து நிற்கும் என்னையும்,

அடையாளம் தெரியவில்லையா கண்ணா !

அடையநினைத்த..........

கடைக்கண் பார்வையால் மயக்கி,

தடையேதும் செய்யாத என்னையும்;

இடையுடன் சேர்த்து அணைத்ததை,

கிடையாது என்பதும் முறையாகுமா கண்ணா !

அடையநினைத்த.........